
# அன்னை தீபம்



சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும்,
ஆதிமயிலிட்டியை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் செல்லையா அன்னராசா

அவர்களின்

## நினைவு வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும்

ஆதிமயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்

# செல்லையா அன்னராசா – JP

அவர்களின்

நினைவாக வெளியிடப்பெறும்

# அன்ன தீபம்

**23-07-2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமர்ப்பணம்



அருந்தவப் பயனால் அவனியில்
அவதரித்த அன்புத் தெய்வமே!
அன்போடு எமை அரவணைத்த எம்
குல விளக்கே! கண்ணின் மணியாக
எமைப் பார்த்து கல்விச் செல்வமதை
எமக்களித்து பண்போடு எமைப் பாரினில்
வாழ வழிவகுத்து இன்பத்திலும்
துன்பத்திலும் எம்முடன் கலந்திருந்து
இன்று எமைவிட்டு இறையடி சேர்ந்த
எந்தையே! எம் தந்தையே!
சிரம் தாழ்த்தி கரம் கூப்பி
கண்ணீர்மல்கி உங்கள் பாதக் கமலங்களில்
இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணுலகில்
21-03-1939

விண்ணுலகில்
23-06-2015

சமூகச் சுடர்

# அமரர் செல்லையா அன்னராசா - JP

## திதி நிர்ணயப்பா

ஆண்டு மன்மதத்தின் ஆடித் திங்கள் எட்டு
பூண்ட பூர்வ ஸப்தமித் திதியதனில் – வேண்டுபுகழ்
அன்னராசாக் கோமான் மண்ணுலகு நீங்கி
தென்னத்தன் அடியடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாடல்கள்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

ஆலந்தானுகந் தமுது செய்தானை
யாதியையமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் முடையானைச்
சிந்திப்பாரவர் சிந்தையுளானை
ஏலவார்குழ லாளுமை நங்கை
யென்றுமேத்தி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பனெம் மானைக்
காணக்கண்ணடி யேன்பெற்றவாறே.

## திருவாசகம்

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தை யெனக்கு
அறியும் வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பானித்தெருவே
ஐயா நீயுலாப்போந்த வன்று முதலின்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் புகுந்து
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழியாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடும் கூடியெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மாற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பின் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொல்தமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயால்.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்தபெரு மாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. செல்லையா அன்னராசா
## அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

வீணாகானபுரம் எனச் சிறப்பிக்கப்படும் பொன்சேரிலங்கை நாட்டின் சென்னியாய் ஒளிர்வது யாழ்ப்பாண நன்னகராகும். இந் நகரின் வடபால் கழனிகளும், வணிக வளாகங்களும், அங்காடியும், மின் உற்பத்தி நிலையமும் சூழ்ந்துள்ள நகரம் சுன்னாகம் ஆகும். கதிரமலை இராச்சியம் நிலைபெற்ற இந்நகரில் கதிரமலைச் சிவனும், சிவபூதராயரும், அருளாட்சி செய்யும் சீரோங்கு சுன்னாகம் தென்பதியில் ஏராண்டு வேளாண்மையில் சிறந்த கந்தப்ப முதலியார் வழி வந்த மரபில் உதித்தவர் செல்லையா. மதிநுட்பமும் செல்வாக்கும் மிக்கவரான இவர் லிப்ரன் தேயிலை நிறுவன முகவராகச் செயற்பட்டதனால் லிப்ரன் செல்லையா என அழைக்கப் பட்டார். மலேசியாவில் பணி புரிந்த இவர் உறவினரான இலட்சுமிப் பிள்ளையை மணம் புரிந்து இனிய இல்லறம் பேணி ஆசைக்கொன்று ஆஸ்திக்கொன்று என இருவரை மக்களாகப் பெற்று மகிழ்ந்தனர். மூத்தவர் பத்மாவதி. அடுத்தவர் அன்னராசா.21-03-1939இல் பிறந்த இவர் அக்காவிலும் ஆறு வயது இளமையானவர். அதனால் வீட்டிலுள்ளவர்களால் பாசத்துடன் வளர்க்கப்பட்டார்.

### கல்வியும் தொழிலும்

இவர் தனது ஆரம்பக்கல்வியை உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் தொடர்ந்தார். ஆறு ஆண்டுகள் தந்தையாருடன் மலேசியாவிலும் வாழ்ந்து வந்தார். கல்வியை நிறைவு செய்ததும் உடுவில் கிராமசபையில் பணியில் இணைந்து எழுதுவினைஞரானார். தொடர்ந்து சுன்னாகம் பட்டண சபையிலும், அம்பாறை மாவட்டத்திலுள்ள இறக்காமம் பட்டண சபையிலும் பணியாற்றி, மயிலிட்டி கிராமசபைக்கு இடமாற்றம் பெற்று வந்தார். தொடர்ந்து வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மயிலிட்டி உப அலுவலப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியதுடன் பதவி உயர்வு பெற்று வலி.வடக்கு பிரதேச சபையின் செயலாளராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைத் துணை நலம்

உரிய பருவம் வந்ததும் திருமணம் செய்து வைக்க பெற்றோர் தீர்மானித்தனர். அவருக்கு ஏற்ற இல்லறத் துணையாக ஆதிமயிலிட்டியைச் சேர்ந்த செல்லையா - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் கனிஸ்ட புத்திரியான பரமேஸ்வரியைத் தெரிவு செய்தனர். பெரியோர்கள் வாழ்த்த 04-02-1972இல் திருமணம் நடைபெற்றது. திருமணத்தைத் தொடர்ந்து மயிலிட்டியில் வாழ்க்கையை ஆரம்பித்த இவர் அங்கும் சுற்றம் பேணி இல்லறம் பேணினார். அத்துடன் பகுதி நேரமாக விவசாயத்தில் ஈடுபட்டதுடன் தமக்கு வழங்கப்பட்ட காணியில் வீடொன்றினையும் கட்டி அங்கு வாழ்ந்து வந்தார்.

இவர்களது இனிய இல்லறத்தின் பயனாக 24-07-1979இல் மூத்த புத்திரன் செந்தூரன் பிறந்தார். 29-12-1982இல் இரண்டாவது புத்திரனான மயூரன் பிறந்தார். இவர்கள் இருவரையும் கண் போல் காத்து, தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்வி பயில வைத்தார்.

செந்தூரன் க.பொ.த.உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் தோற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி, அங்கு பயின்று வணிகமானி பட்டம் பெற்றார். மேலும் கொழும்பு பல்கலைக் கழகத்தில் முரண்பாடு தீர்த்தல் பட்டபின் டிப்ளோமா (PGDCE) முடித்தார். பின்னர் அபிவிருத்தி உத்தியோகஸ்தராக கடமையில் இணைந்து, வாழ்வாதார கடன் முகாமைத்துவ நிலையத்தின் பணிப் பாளராக கடமையாற்றி, தற்போது உள்ளூராட்சித் திணைக்களத்தில் கடமையாற்றி வருகிறார். இவருக்கு இணுவிலைச் சேர்ந்த கதிர்காமநாதன் - அருந்தவராணி தம்பதிகளின் ஏக புத்திரியான ஆர்த்திகாவை 09-04-2009இல் மணம் முடித்து வைத்தனர். இவர்களின் இல்லறமாம் நல்லறத்தின் பயனாக லயஹரி, யதூரன், லக்ஸ்மினன் ஆகியோர் பிள்ளைச் செல்வங்களாக உதித்தனர்.

மயூரன் க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் தோற்றி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி, அங்கு பயின்று சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும் விஞ்ஞானமானி B.Sc in (EMV) பட்டம் பெற்றார். பின்னர் அபிவிருத்தி உத்தியோகஸ்தராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையில் இணைந்து, தற்போது தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தில் கடமையாற்றி வருகிறார். இவருக்கு பண்ணாகத்தைச் சேர்ந்த சிதம்பரநாதன் - அன்புமலர் தம்பதிகளின் ஏக புத்திரியான நீதிமதியை 28-08-2014இல் மணம் முடித்து வைத்தனர். நீதிமதி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார்.

**சுற்றம்**

இவர் உடன் பிறந்தோரை அரவணைத்து சுற்றம் பேணி வந்துள்ளார்.தனது தாயார் 1970இல் அமரத்துவம் அடைந்ததைத் தொடர்ந்து தனது ஒரே சகோதரியான பத்மாவதியை பாசத்துடன் பேணினார். அவருக்கு ஆதிமயிலிட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியத்தை மணம் முடித்து வைத்ததுடன் அதற்கு மாற்றாக அவரது தங்கையான பரமேஸ்வரியைக் கரம் பிடித்தார். சுப்பிரமணியம்-பத்மாவதி தம்பதி களுக்கு ஸ்ரீகுமரன், ஜெயலட்சுமி ஆகியோர் பிள்ளைகளாயினர். ஸ்ரீகுமரன் கல்வி முதுமானி(M.Ed.) பட்டம் பெற்று, ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றி, தற்போது கிளிநொச்சி கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வருகிறார். இவர் கைதடி நுணாவிலைச் சேர்ந்த சிவரஞ்சினியை மணம் முடித்து ஸ்ரீபிரியன், சிவஇனியன், சிவசங்கவி ஆகியோரைப் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்று சுன்னாகத்தில் வாழ்கின்றனர். ஜெயலட்சுமி சமுர்த்தி உத்தியோகஸ்தராகக் கடமையாற்றி, அராலியைச் சேர்ந்த சிவநேசனை மணம் புரிந்து ஹம்சிதா, சஜன் ஆகியோரை மழலைச் செல்வங்களாகப் பெற்று இங்கிலாந்தில் வாழ்கின்றனர்.

அவர் தனது மனைவியின் உடன் பிறந்தோருடனும் மிகுந்த அன்போடு பழகி, அவர்களது மேம்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துள்ளார். மனைவியின் மூத்த சகோதரியான சின்னத்தங்கம் பன்னாலையைச் சேர்ந்த இராசரத்தினத்தை மணம் முடித்து, பவானி, ஜெயபவான், தயாளினி, ரஞ்சினி, சுகந்தினி ஆகியோரைப் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்றனர். இராசரத்தினம் 1977இல் ஹெக்கிராவவில் நடைபெற்ற இனக் கலவரத்தில் அமரத்துவம் அடைந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவானி தொல்புரத்தைச் சேர்ந்த ஆனந்தராசாவைக் கரம் பற்றி மதுமிதனை பிள்ளைச் செல்வமாகப் பெற்று தெல்லிப்பழையில் வாழ்ந்து வருகின்றனர். ஜெயபவான் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சசிச்செல்வியை மணம் புரிந்து, ஜெனிஷா, யானுஷன், ஜெருஷா ஆகியோரப் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்று சுவிற்சர்லாந்தில் வாழ்ந்து வருகின்றனர். தயாளினி இளவாலையைச் சேர்ந்த ஞானவேலைத் திருமணம் செய்து கீர்த்தனா, கீர்த்திகா, தனுசன் ஆகியோரைப் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்று, சுவிற்சர்லாந்தில் வசித்து வருகின்றனர். றஞ்சினி பலாலியைச் சேர்ந்த கேதீஸ்வரனை மணம் புரிந்து, மதுசன், சாளினி ஆகியோரை நன்மக்களாகப் பெற்று, சுவிற்சர்லாந்தில் வாழ்ந்து வருகின்றனர். சுகந்தினி கோப்பாயைச் சேர்ந்த பரமேஸ்வரனை மணம் முடித்து றவீனா, சைனிகா, தரணிகா ஆகியோரை மழலைச் செல்வங்களாகப் பெற்று ஜேர்மனியில் வாழ்ந்து வருகின்றனர்.

மனைவியின் அடுத்த சகோதரனான முருகையா பன்னாலையைச் சேர்ந்த தவமணியை மணம் புரிந்து பகீரதன், தயாபரன், மோகனா, தாரணா ஆகியோரை பிள்ளைகளாகப் பெற்றனர். பகீரதன் சுவிற்சர்லாந்தில் வாழ்ந்து வருவதுடன் தயாபரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டம் பெற்று தெல்லிப்பழை புகையிரத நிலைய அதிபராகக் கடமையாற்றுகிறார். மோகனா யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவப் பட்டப்படிப்பை மேற்கொள்கின்றார். தாரணா பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைமாணி பட்டப் படிப்பை மேற்கொள்வதுடன் முரளீதரனை மணம் முடித்துள்ளார்.

மனைவியின் அடுத்த சகோதரியான மல்லிகாதேவி கைதடியைச் சேர்ந்த கிருஸ்ணமூர்த்தியை மணம் முடித்து முரளீதரன், ஸ்ரீதரன் ஆகியோரை பிள்ளைச் செல்வங்களாகப் பெற்று சுன்னாகத்தில் வசித்து வருகின்றனர். கிருஸ்ணமூர்த்தி அமரத்துவம் அடைந்து விட்டார். முரளீதரன் தாரணாவை மணம் முடித்து பிரான்ஸில் வாழ்கிறார். ஸ்ரீதரன் பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டம் பெற்று பொருளாதார அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகத்தராக தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் பணி புரிகின்றார்.

மனைவியின் இன்னொரு சகோதரனான கந்தசாமி மயிலிட்டியைச் சேர்ந்த ஆசிரியையான சிவகௌரியை மணம் புரிந்து பிரசாந்தி, மதுசாந்தி, புகழாயினி ஆகியோரை பிள்ளைச் செல்வங்களாகப் பெற்று இங்கிலாந்தில் வசித்து வருகின்றனர்.

மனைவியின் கடைசித் தங்கையான புவனேஸ்வரி பன்னாலையைச் சேர்ந்த நவரத்தினத்தைத் திருமணம் செய்து கேசவன், தனலட்சுமி, தனுசா, மதுரா ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்று சுன்னாகத்தில் வாழ்ந்து வருகின்றனர். நவரத்தினம் இராணுவ நடவடிக்கையின் போது அமரத்துவம் அடைந்து விட்டார். கேசவன் சுவிஸில் வசித்து வருகிறார். தனலட்சுமி திருமணம் முடித்து ஜேர்மனியில் வாழ்ந்து வரும் போது அமரத்துவம் அடைந்தார். தனுசா சுன்னாகத்தைச் சேர்ந்த சிவகுமாரை திருமணம் செய்துள்ளார். மதுரா யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கலைமாணி பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார்.

மனைவியின் கடைசித் தம்பியான அண்ணாத்துரை பண்ணாகத்தைச் சேர்ந்த வதனியைத் திருமணம் செய்து பிரான்சில் வசித்து வருகின்றார். இவர்களுக்கு திவியா, துசியா, தனுசா ஆகியோர் பிள்ளைச் செல்வங்களாயினர்.

**சமூகப் பணி**

இவ்வாறு சுற்றம் சூழ வாழ்ந்த அமரர் அன்னராசா பொதுச் சேவையிலும் ஓய்வொழிச்சல் இன்றி ஈடுபட்டார். சுன்னாகம் தெற்கு சிவபூதராயப் பெருமான் மீது அளவற்ற பக்தி கொண்ட அவர் சிறுவயதில் சிவபூதராயருக்கு சரீரத் தொண்டாற்றி வந்தார். வீடு வீடாகச் சென்று பிடியரிசி சேர்த்து, ஆலயத்தின் நித்திய பூசைக்கு உதவி வந்தார். ஆலயத்தைப் பரிபாலிக்கும் பணியில் பெரியவர்களுடன் இணைந்து பணியாற்றினார். சிவபூதராயர் ஆலயத்துக்கென 1974இல் அமைக்கப்பட்ட முதலாவது பரிபாலன சபையில் இருந்து அவர் அமரராகும் வரை (அம்பாறையிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பிலும் வாழ்ந்த காலங்கள் தவிர) அச்சபையை வழிநடத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சபையின் கௌரவ செயலாள ராக நீண்ட காலம் பணியாற்றியுள்ளார்.

ஆலய வளாகத்தில் 1970களின் ஆரம்பத்தில் ஒரு சனசமூக நிலையத்தை நிறுவிச் செயற்படுத்தினார். அது நீண்டகாலம் நிலைக்கவில்லை. சுன்னாகம் தெற்கு பிரதேசத்தில் ஒரு சனசமூக நிலையத்தை நிறுவ வேண்டும் என்ற அவரது ஆவல் அப்பிரதேச இளைஞர்களால் 1985இல் நிலைபெற்றது. அவர்களை வழிப்படுத்தி, ஊக்குவித்து தனது காணியில் தற்காலிகமாக அதனை இயங்கச் செய்ததுடன் அதற்கான பதிவினை மேற்கொள்ளவும் வகை செய்தார். சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றம் என்ற அந்த அமைப்பின் உருவாக்கத்துக்கு காரணகர்த்தாவாக இருந்த அவர் அதன் போசகராக இறுதி வரை (30 ஆண்டுகள்) இருந்ததுடன் அதன் மேம்பாட்டுக்காக அயராது உழைத்தார்.

அதுபோல பிரதேசத்தில் ஒரு இந்து இளைஞர் மன்றத்தை உருவாக்கும் எண்ணத்திற்கும் செயல் வடிவம் கொடுத்தார். சுன்னாகம் தெற்கு இந்து இளைஞர் மன்றம் உருவாக்கப்பட்டு கடந்த 15 ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகிறது. அதன் போசகராகவும் அவர் இறுதி வரை இருந்து வழிப்படுத்தியுள்ளார்.

சுன்னாகம் தெற்கு விவசாயிகள் சம்மேளனம், தென் சுன்னையூர் சிவபூதராயர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றிலும் உறுப்பினராக இணைந்து பணியாற்றியுள்ளார்.

ஆதிமயிலிட்டி மக்களால் கிளாக்கர் எனச் செல்லமாக அழைக்கப்பட்ட இவர் ஆதிமயிலிட்டி காசிபூதராயர் ஆலய வழிபடுவோர் சபையின் தலைவராக நீண்ட காலம் கடமையாற்றி, ஆலய வளர்ச்சிக்கு உதவினார். அத்துடன் 1990இல் மக்கள் இடம்பெயர்ந்த சூழலில் உரிய தரப்புக்களுடன் தொடர்பு சிவபூதராயர் மற்றும் பிள்ளையார் ஆலய விக்கிரகங்களை எடுத்து வந்து சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலயத்தில் பரிபாலித்து வரவும் நடவடிக்கை எடுத்திருந்தார். வருடந் தோறும் சுன்னாகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலி வடக்கு பிரதேச சபையின் செயலாளராக பணியாற்றி
ஓய்வு பெற்ற வேளை இடம்பெற்ற பாராட்டுவிழாவில் (1999)



சமய, சமூக சேவையில் பொன்விழாக் கண்ட அமரரை பாராட்டி சுன்னாகம், மயிலிட்டி
பொது அமைப்புக்கள் இணைந்து நடாத்திய கௌரவிப்பு விழாவில் சுன்னாகம் தெற்கு
இந்து இளைஞர் மன்றத்தினரால் வழங்கப்பட்ட முதலாவது சமூகச்சுடர் விருதினை
ஓய்வுபெற்ற அதிபர் கலாபூஷணம் சு. துரைசிங்கம் வழங்குகிறார். (2006)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிமயிலிட்டி காசி பூதராயப் பெருமானின் அலங்கார உற்சவம் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ஆதிமயிலிட்டி சனசமூக நிலையத்தை இயங்க வைத்த பெருமை இவரைச் சாரும்.இன்றும் அது பதிவு செய்யப்பட்ட நிலையமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஓய்வு பெற்ற பின்னர் வலி. வடக்கு ஓய்வூதியர் சங்கத்தில் இணைந்து பணியாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் அவர் பணியாற்றிய காலத்திலும் சரி, ஓய்வு பெற்ற பின்னரும் சரி உள்ளூராட்சி சேவையில் பிரதேச இளைஞர்களை இணைத்து அவர்களுக்கான அரச வேலை வாய்ப்புக் களையும் பெற்றுக் கொடுத்து உள்ளார்.

நீதி அமைச்சினால் சமாதான நீதிவான் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட அவர் அந்தக் கடமையினையும் மக்கள் நலன் சார்ந்து செய்து வந்தார். அவரது 50 வருட சமய, சமூக சேவையினைக் கௌரவித்து சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தில் 2006ஆம் ஆண்டு மாபெரும் கௌரவிப்பு விழா இடம் பெற்றது. சுன்னாகம் மற்றும் மயிலிட்டி பொது அமைப்புக்கள் இணைந்து நடத்திய இப்பெரு விழாவில் சான்றோர்கள் பலர் கலந்து கொண்டு அவரது சேவையினை நயந்து போற்றினர். பொன்னாடை சூடி, கேடயங்களும், பாராட்டுப் பத்திரங்களும், விருதுகளும் வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டார்.

ஊரும் உலகும் போற்ற வாழ்ந்த அமரர் தன் பிள்ளைகளை நன்னிலைப்படுத்தி, நோயுற்ற மனைவியை நீண்ட காலமாகப் பராமரித்து, அவர் அமரத்துவம் அடைந்து 54 நாட்களில் நோயுற்றடராமல் நொந்து மனம் வாடாமல் பாயிற் கிடவாமல் 23-06-2015 அன்று இவ்வுலகை நீங்கினார். அன்னாரின் ஆத்மா சிவபூதராயப் பெருமானின் அழைப்பையேற்று அவரடி சேர்ந்தது என்றே கொண்டு, அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூதராயரின் தொண்டர்

அமரர் செல்லையா அன்னராசா அவர்கள் சுன்னாகம் தெற்கு சிவபூதராயப் பெருமான் மீது இடையறாத பக்தி கொண்ட ஒரு பெரு மகனாவார். அவர் ஆலயத்தை கடந்த 60 ஆண்டுகளாக பரிபாலித்து வந்துள்ளார். அதுபோலவே திருமண நிமித்தம் ஆதி மயிலிட்டிக்கு வந்து அங்கும் காசிபூதராயப் பெருமானுடைய வழிபடுவோர் சபையை நல்ல முறையில் வழிநடத்தி வந்துள்ளார். அத்துடன் இடப்பெயர்வைத் தொடர்ந்து ஆலய விக்கிரகங்களை எடுத்து வந்து சுன்னாகத்தில் பரிபாலித்து வருகிறார். 1980களின் இறுதிக் காலத்தில் எமது தந்தையார் அமரர் சோமசுந்தரசர்மாவை சுன்னாகம் தெற்கு ஸ்ரீ சிவபூதராயர் ஆலய நித்திய பூஜைக்கு அமரர் அன்னராசா அவர்கள் மூலமாக பரிபாலனசபை நியமித்தது.

அன்று முதல் எமது குடும்பம் இங்கேயே நீண்டகாலம் தங்கியிருந்து எனது உபநயனம், அக்காவின் திருமணம், எனது குருப் பட்டாபிஷேகம் என எல்லாம் இந்த ஆலயத்திலேயே நிகழ்ந்தேறியது. இவற்றுக்கெல்லாம் உதவிகரமாக அமரர் அன்னராசா செயற்பட்டார்.

அவர் அரச சேவையில் பணியாற்றிய போதும் அவரது ஆன்மா முழுமையாக சிவபூதராயப் பெருமானுடைய ஆலயத்திலேயே நிறைந் திருந்தது. அவரைவிட்டு ஆலயச் செயற்பாடுகளை வேறு பிரித்துப் பார்க்க முடியாது.

அத்தகைய ஒரு பெருமனிதன் அமரத்துவம் அடைந்தமை எம்மைப் பெரும் துயருள் ஆழ்த்தியுள்ளது. அன்னாருடைய ஆத்மா சிவபூதராயப் பெருமானுடைய திருவடி நிழலில் சாந்திபெற இறையருளை இறைஞ்சுகின்றேன். குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சிவஸ்ரீ. சோ. தீபதர்சனக் குருக்கள்**

சுன்னாகம் தெற்கு.

ஆலய நித்திய பூசகரும்
பிரதம குருக்களும்
ஸ்ரீ சிவபூதராயர் தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசப்பற்று மிக்கவர்

அமரர் செல்லையா அன்னராசா அவர்களை எழில்கொஞ்சும் எங்கள் சுன்னாகத்தைச் சேர்ந்த சகவாசியாக மட்டுமல்லாமல் எனது தந்தையார் அமரர் திரு. வி. தர்மலிங்கம் அவர்களின் தீவிர அரசியல் ஆதரவாளராகவும், இனப்பற்றும் தேசப்பற்றும் மிக்க ஒரு சிறந்த பிரஜையாகவும் நான் எனது பால்ய பருவத்திலிருந்தே நன்கு அறிவேன்.

எவருடனும் இனிமையாக பழகக்கூடிய அன்னார் தீவிர முயற்சி யாளரும், சிறந்த சமூகத் தொண்டனுமாவார். எழுவினைஞராக தனது அரச சேவையை ஆரம்பித்த இவர் தனது வினைத்திறனால் பல பதவி உயர்வுகளைப் பெற்று இறுதியில் வலிவடக்குப் பிரதேச சபையின் செயலாளராக அளப்பரிய சேவைகளை மக்களுக்கும் இந்த மண்ணுக்கும் ஆற்றி ஓய்வுபெற்றவர்.

அமரர் செல்லையா அன்னராசா அவர்கள் சமூகத் தொண்டு களுடன் மாத்திரம் தனது சேவைகளை மட்டுப்படுத்தாமல் சமயத் தொண்டுகளிலும் பரவி நின்றார். அந்த வகையில் சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலய செயலாளராகவும், ஆதிமயிலிட்டி காசிபூதராயர் ஆலய வழிபடுவோர் சபையின் தலைவராகவும் நீண்டகாலம் தொண்டாற்றினார்.

இம்மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்த அன்னாரின் இழப்பு எமது சமூகத்திற்கு உண்மையிலேயே ஒரு பேரிழப்பு.

அன்னாரின் இழப்பின் துயரிலிருந்து விடுபடும் மனவலிமையை உற்றார் உறவினர்கள் பெறுவதற்கும், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றேன்.

**த. சித்தார்த்தன்**
வட மாகாணசபை உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பிற்குரிய அன்னராசா ஐயா...

மதிப்பிற்குரிய அமரர் செல்லையா அன்னராசா அவர்களுடன் கடந்த சில ஆண்டுகளாகவே பழகிவந்துள்ளேன். பழகிய முதல் சந்தர்ப்பத்திலேயே அவருடைய அடக்கமான, பண்பான குணங்கள் மற்றவர்களை (வயது வேறுபாடின்றி) மதித்துப் பழகுகின்ற பாங்கு என்பன என்னைக் கவர்ந்தன. அவர் அதிகம் பேசமாட்டார். சிந்தித்து பொறுமையாக குறைவாக பயனுள்ள வகையில் பேசுவார். இது அவரது இன்னோர் உயர்ந்த பண்பாகும். அவரது அமைதி, அடக்க சுபாவத் திற்குள் மிகுந்த சமூக எண்ணமும் அரசியல் நோக்குகளும் இருந்தன என்பதை ஆழ்ந்து அவரை நோக்கிய சிலரே அறிய முடியும். அவருடன் பழகிய அனைவரும் அவரது நற்பண்புகளைப் போற்றியே நான் பார்த் திருக்கிறேன்.

அவரது குடும்ப வாழ்விலும் சரி, சமூக வாழ்விலும் சரி, ஆன்மீக வாழ்விலும் சரி தனிமனிதனாக தனது சாதாரண உடமைகளுக்கு மேலாக அரிய பல செயல்களைச் செய்துள்ள ஓர் மாமனிதர். தந்தை மகற்காற்றும் உதவி அவையில் முந்தியிருக்கச் செய்தல். அவர் தனது இரு புதல்வர்களையும் சிறந்த கல்வித் தகுதியும், தலைமைத்துவ ஆற்றலும் கொண்டவர்களாக உருவாக்கியதுடன் நீண்ட காலமாகவே நோய்வாய்ப்பட்டிருந்த தனது மனைவியை இறுதிவரை கவனித்து அவர் உயிர் பிரியும் வரை தனது கடமைகளை நிறைவாகச் செய்தவர்.

தனது சமூக மக்களுக்கான சனசமூக நிலைய தேவையை உணர்ந்து முத்தமிழ் மன்றம் என்ற சனசமூக நிலையத்திற்கு தனது நிலத்தையே வழங்கி அதனை ஆரம்பித்து செயற்படுத்தியவர்.

தனது குலதெய்வத்தை தான் இடம்பெயர்ந்து வாழ்ந்த பூமியில் பிரதிஷ்டை செய்து கிரமமாகப் பூஜைகள் இடம்பெற வழி வகுத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அரங்கில் தமிழ் மக்களுக்கு பொருத்தமான கட்சியையும் அதில் பொருத்தமான தலைவர்களையும் இனங்கண்டு ஆதரித்து வந்த அரசியல் விழிப்புணர்வாளர். கூட்டமைப்பிற்குள் எமது கருத்துக்களையும் செயற்பாடுகளையும் ஏற்று அங்கீகரித்து ஆதரவளித்த நற்சிந்தனையாளர்.

அவரது மனைவியின் உயிர் பிரிந்து 2 மாதத்திற்குள் காலன் அவர் உயிரையும் எடுத்துக் கொண்டான் என்பது அவர்களது தூய இல்லற வாழ்வின் அடையாளமாகவே கொள்ள முடிகின்றது.

ஓர் தந்தையாக, ஓர் தலைவனாக, ஓர் ஆளுமை மிக்க குடும்பத்தவராக, ஓர் சிறந்த சமூக சேவகனாக, சிறந்த ஆன்மீகவாதியாக மற்றும் ஓர் விழிப்புணர்வுமிக்க அரசியல் ஆர்வலனாக பல்வேறு பரிணாமங்களை முழுமையாக வெளிப்படுத்தியதன் மூலம் ஓர் முழுமையான வாழ்க்கையை வாழ்ந்து முடித்தவர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

இவ்வுலகில் பிறப்பவர் அனைவரும் இறப்பது உலக நியதி. எனினும் அர்த்தத்தோடு வாழ்ந்தவர்கள் குறைவே. இவ்வகையில் மிக அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்ந்தவர் இவர். முதுமையில் அவர் உலக வாழ்வைத் துறந்தாலும் அவர் ஆற்றிய பணிகளும் சமூகத்திற்கு அவரின் தேவையும் இறப்பின் பின்னும் அவருக்கு புதிய வாழ்வை வழங்கியிருக்கிறது. இறப்பு ஓர் முடிவல்ல. அது இன்னோர் வாழ்க்கையின் தொடக்கம் என்பதற்கு ஐயா அன்னராசா அவர்கள் இன்னுமோர் சிறந்த உதாரணமாகும்.

**கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்**
வடக்கு மாகாணசபை உறுப்பினர்,
உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
ஒருங்கிணைப்புக் குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை. (மல்லாகம்)
වලිකාමම් උතුරු ප්‍රාදේශීය සභාව කන්කසන්තුරය (මල්ලාකම්)
Valikamam North Pradeshiya Sabha Kankesanthurai (Mallakam)

எனது இல / මගේ අංකය / My No

உமது இல / ඔබේ අංකය / Your No

திகதி / දිනය / Date

# பண்பாகக் கடமையாற்றியவர்

அமரர் திரு. செல்லையா அன்னராசா அவர்கள் எமது வலிகாமம் வடக்கு மயிலிட்டிப் பிரதேசத்தினைச் சேர்ந்தவராவார். இவர் எமது சபையில் கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதியில் எழுதுநராக சேவையாற்றியுள்ளார். இறுதியில் ஓய்வுபெறும் காலத்தில் சபையின் செயலாளராகவும் கடமையாற்றியவர். இவர் எமது சபையில் கடமையாற்றிய காலப்பகுதியில் மிகவும் திறமையான ஒருவராகவும், சக அலுவலர்களுடன் மிகவும் அன்பாகவும், பண்பாகவும் நடந்து கொள்ளக்கூடியவராகவும் விளங்கினார் என்பது இவருடன் கடமை யாற்றியவர்களிடம் இருந்து அறியக்கூடியதாகவுள்ளது.

அன்னாரது மறைவானது குடும்பத்தவர்களுக்கு மட்டுமல்ல எமது பிரதேசத்திற்கும் ஈடு செய்யமுடியாததாகும். “வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்” என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க அவர் இம்மையில் மட்டுமல்ல மறுமையிலும் மிகச்சிறந்த ஒரு இடத்தினை அடைவார் என்பது உறுதி. இவரது மறைவிற்காக அன்னாரது குடும்பத்திற்கு எனது சார்பிலும் எமது வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. சுகிர்தன்**
கௌரவ தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை (மல்லாகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பான அரசியல் செயற்பாட்டாளர்

எமது பிரதேசத்தின் பல்வேறு சமய, சமூகப் பணிகளில் பற்றுறுதியுடன் செயற்பட்ட ஒரு பண்பாளராக அமரர் செல்லையா அன்னராசா அவர்கள் விளங்கினார். எமது கிராமத்தில் பல்வேறு அமைப்புக்களுக்கும் தலைமையேற்று, வழிகாட்டி அவர் செயற் பட்டுள்ளார்.

அத்துடன் தமிழரசு அரசியலிலும் ஒரு ஆதரவாளராகச் செயற் பட்டு வந்துள்ளார். எமது பிரதேசத்தின் கிராமசபை உறுப்பினர் அமரர் பொன்னுத்துரை, உடுவில் கிராமசபைத் தலைவர், அமரர் அ. முத்து லிங்கம் ஆகியோருடன் நெருக்கமாகச் செயற்பட்டு அவர்களது அரசியற் செயற்பாடுகளுடன் இணைந்து பணியாற்றி உள்ளார்.

அத்துடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான அமரர் வி. தர்மலிங்கம், வீ. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா ஆகியோருடன் தொடர்பைப் பேணி ஆதரித்து வந்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களோடு தொடர்புகொண்டு அவர் களது பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகளை சுன்னாகம் தெற்கு மற்றும் மயிலிட்டி பொது அமைப்புக்களுக்கு பெற்றுக்கொடுத்த அரும் பணியினையும் அவர் ஆற்றியுள்ளார். அரசியல் மற்றும் பொது விடயங்கள் தொடர்பில் என்னுடன் அளவளாவி பயனுள்ள தகவல் களையும் சொல்லி வந்துள்ளார்.

பிறரால் மதிக்கப்படுபவராக, பிறரை நேசிப்பவராக வாழ்ந்த அன்னராசா அண்ணர் மறைந்துவிட்டார். இது மிகவும் சோகந் தருவதாகும். அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்பதோடு அன்னாரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரி வித்துக்கொள்கின்றேன்.

**இ. குமாரசாமி**
கௌரவ உறுப்பினர்
வலிதெற்கு பிரதேச சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் எம் மனங்களில் நிறைந்து நிற்கும் அன்னராசா அண்ணர்

யோகர் சுவாமிகளின் திருவடிகள் பதிந்த இடமாகவும், முருகேச பண்டிதர் வாழ்ந்த இடமாகவும் திகழும் சுன்னாகம் தெற்கில் புகழ்பூத்த குடும்பமாக விளங்கிய அமரர் செல்லையா - இலட்சுமிப்பிள்ளை குடும்பத்தில் புத்திரராகப் பிறந்து வாழ்ந்தவர் அமரர் அன்னராசா அண்ணர்.

இவர் தனது இளம்பராயத்திலிருந்தே பூதராயப் பெருமான் ஆலயத்துடன் ஈடுபாடுடையவராக வாழ்ந்தவர். சிவபூதராயப் பெருமான் அருளிய அற்புதங்களை நன்கு தெரிந்தவர் என்ற வகையில் ஆலய பரிபாலன சபையின் பொன்விழா மலரில் "சிவபூதராயர் ஆலய வரலாறும் வழிபாடும்" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வரைந்துள்ளார். ஆரம்ப காலத்தில் ஆலயத்தைப் பரிபாலிப்பதற்காக பிடிஅரிசி சேர்த்து அதனை விற்றுப் பெற்ற வருமானத்தைப் பயன் படுத்துவதிலும் உதவியவர். அமரர் அன்னராசா அவர்களை ஆலயத் தொண்டில் ஈடுபடச் செய்தவர்களுள் அமரர்கள் சி. நவரத்தினம், ச. பொன்னம்பலம், சி. ஆறுமுகம், சு. சண்முகம், இ. இராசையா போன்றவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்திக் கொள் கின்றோம். இவர்கள் காட்டிய வழியில் ஆலயப் பணிகளில் இவரும் ஈடுபட்டு வந்தவர். இவர் வாழ்ந்த சமகாலத்தில் ஆலயத்தின் வளர்ச்சிக்காக இவருடன் இணைந்து அரும்பாடுபட்ட அமரர்களான பேரன் இராசையா, சி. சதாசிவம், ஆ. கந்தையா, விதானையார் நடராசா, து. சிவஞானம் போன்றோரையும் நாம் மறந்துவிடமுடியாது. ஆலய பரிபாலனசபையின் செயலாளராக இறுதிவரை செயற்பட்டு திருவிழாக்கள், பூசைகள் என்பன ஒழுங்கான முறையில் நடைபெற வழிகாட்டியவர்.

ஆலயத் தொண்டில் ஈடுபட்ட அமரர் அன்னராசா அவர்கள் அரச பணியையும் ஆற்றியவர். அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் எழுதுவினைஞராகக் கடமை புரிந்தவர். மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா குடும்பத்தினரின் மகள் பரமேஸ்வரியை திருமணம் செய்து இல்லற வாழ்வில் இரண்டு புத்திரர்களுக்குத் தந்தையானவர். அவர்களை நல்ல முறையில் வளர்த்தெடுத்து பட்டதாரிகளாக்கியதுடன் அவர்களுக்கு நல்ல குடும்ப வாழ்க்கையையும் அமைத்துக் கொடுத்து பேரப்பிள்ளைகளையும் கண்டவர்.

இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளருமாவார். தனக்குக் கிடைத்த சமாதான நீதிவான் பதவியை சமூகத்திற்கு நற்பணியாற்றப் பயன்படுத்தியவர். வலி வடக்கு பிரதேச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாளராக பதவி வகித்ததன் மூலம் ஓய்வூதியர்களுக்கு சேவை புரிந்தவர்.

தனக்குக் கிடைத்த இப்பிறவியின் பயனாக நல்ல பல காரியங்களை செய்த மன நிறைவுடன் அமரரானவர். எல்லாவற்றிற்கும் மேலாக ஆலயம் ஒன்றைக் கட்டுவதில் முன்னின்றுழைத்த பெரும் புண்ணியவானுமாவார்.

இறைவனின் திடீர் அழைப்பு அவரின் ஆத்மா இவ்வுலகைவிட்டு நீங்கி இறைவனடி சேர்ந்துவிட்டது. அன்னாரது ஆத்மா சாந்திபெற எங்கள் குலதெய்வமாகிய சுன்னாகம் தெற்கு ஸ்ரீ சிவபூதராயப் பெருமானுடை பாதங்களைப் பணிந்து வணங்கி நிற்கின்றோம்.

**இ. தம்பிரத்தினம்**
தலைவர்

**பொ. கமலநாதன்**
பொருளாளர்

**மற்றும்**

**ஸ்ரீ சிவபூதராயர் தேவஸ்தான பரிபாலன**
**சபையினரும், அடியவர்களும்,**
**இந்து இளைஞர் மன்றத்தினரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் மன்றத்தின் காரணகர்த்தா...

என் நினைவுகளை முப்பது ஆண்டுகள் பின்நோக்கிச் செலுத்து கின்றேன். ஆம் சகபாடிகளுடன் இணைந்து முத்தமிழ் மன்ற நிர்வாக சபையை ஏற்படுத்தி அதன் கூட்டங்களை தற்காலிக அனுமதியுடன் சிவபூதராயர் ஆலய மண்டபத்தில் நடாத்திய காலம் அது. கட்டிடம் ஒன்றை அமைத்து அதில் முன்பள்ளி, சனசமூக நிலையம் அமைக்க பொருத்தமான நிலம் ஒன்றை தேடி யாரிடம் சென்று கேட்கலாம் என்று சோர்வுற்ற வேளையில் அன்னராசா அண்ணர் தனது காணியை ஒப்பந்த அடிப்படையில் தந்து உதவி மன்றச் செயற்பாட்டிற்கு உற்சாகமளித்ததுடன் கணக்குப் பரிசோதகராக, போசகராக, பத்திரிகை எடுத்துவந்து வாசிப்புப் பகுதிக்கு போடுபவராக, ஆலோச கராக இருந்து எமது மன்ற வளர்ச்சிக்கு உதவிபுரிந்தார்.

முப்பது ஆண்டுகால வரலாறு கொண்ட நிலையத்தை அமைக்க உந்துசக்தியாக விளங்கியது மட்டுமல்லாமல் இக்கிராமத்தில் அருள் பாலிக்கும் சிவபூதராயர் ஆலயத்தின் நிர்வாகத்தின் முதுகெலும்பாக தனது இறுதிக் காலம் வரை செயற்பட்டவர் என்றால் அது மிகை யாகாது.

தனது இரு மகன்களையும் உயர் கல்விக்கு வழிகாட்டி இந் நாட்டிலேயே அரச துறையில் உத்தியோகத்தர்களாக ஆக்கியமை மிகச் சிறப்பானதாகும்.

மரணம் என்பது வாழ்வின் முடிவல்ல. புகழுடல் மறைந்தாலும் அவரது பணிகள் என்றும் நிலைத்திருக்கும். அன்னாரின் பிரிவால் துயரமடைந்துள்ள அனைத்து உள்ளங்களுக்கும் எமது நிர்வாகம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல சிவபூதராயப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.


**தாமோதரம்பிள்ளை இராசரத்தினம்**
செயலாளர்
சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுன்னாகம் தெற்கு முத்தமிழ்மன்றக் கட்டடத் திறப்பு விழாவில்
அமரர் இளையதம்பி இராசையாவின் திருவுருவப் படத்தை
அமரர் திரைநீக்கம் செய்து வைக்கிறார்.




சிவபூதராயர் ஆலயத்தில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய பலாலி ஆசிரியர்
கலாசாலை பிரதி அதிபர் சிவத்தமிழ் சொல்லழகர் ச. லலீசனுக்கு
அமரர் பொன்னாடை போர்த்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் ஐம்பது வருட சமய சமூக சேவையைக் கௌரவித்து
மயிலிட்டி வாழ் மக்கள் வழங்கிய பாராட்டுப் பத்திரம்.



சிங்கப்பூரில்
பெறாமக்களுடன்
அமரர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னராசா அண்ணலிற்கு எங்கள் அஞ்சலி

அன்புக்குரிய பெருமகனே! அன்னராசரே!! நீர் அமரர் உலகு அடைந்த செய்தி கேட்டு மிகவும் நொந்தோம். நீர் சுன்னாகம் மக்களின் மைந்தராக இருந்தும் எங்கள் மண்ணில் புகுந்தும் மிகுமிகு எழில் படைத்தீர். அதனாலேயே எங்கள் குலதெய்வமான பூதராயரை நீங்கள் சுன்னாகம் மண்ணில் இருந்தும் பழவினைத் தொடர்பால் குலதெய்வ மாக ஏற்றீர்.

நாங்கள் இடம்பெயர்ந்து அல்லல் உற்றபோதும் எங்கள் குல தெய்வத்தை எடுத்துவந்து உங்கள் பூதராயர் ஆலயத்திலேயே வைத்து வணங்க இடம் தந்தீர். அதனாலேயே உங்கள் ஆலய பரிபாலன சபைச் செயலாளராக இருந்தது மட்டுமன்றி எங்கள் ஆலயத்திலும் தலைவர் பதவியை ஏற்று ஒளி படைத்தீர். அதனால் தானோ என்னவோ பாயில் கிடந்து பரிதவிக்காது உமக்கு உரிய இடம் இதுவல்ல என்னிடமே உம்மிடம் என்று பூதவராயர் உம்மை அழைத்தார் போலும்.

ஆகவே அவரடியில் உம் ஆத்மா சாந்திபெற மிகமிக இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆதிமயிலிட்டி காசி பூதராயர்**
**நிர்வாகசபையினரும்**
**மயிலிட்டி வாழ் மக்களும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னித்து வாழ்ந்த மனிதம்

அமரர் செல்லையா அன்னராசா அவர்களது மரணக் கிரியையின் இறுதியில் நடைபெற்ற அஞ்சலி உரைகள் என்னை இக்கட்டுரையை எழுதத் தூண்டியது. பலதரப்பட்ட பிரச்சினைகள் மலிந்து காணப்படும் இந்தச் சமூகத்தில் குற்றங்களைக் கண்டு குறை காணாது அல்லது அவற்றிற்கு மன்னிப்புக் கொடுத்து வாழ்ந்தவர் எங்கள் அன்னராசா அண்ணர். ஒருவனது பெயர் அவனது குணத்தில் செல்வாக்குச் செலுத்தும் என்பர். "அன்னம்" தேவையற்றதை விடுத்து தேவையானதை மட்டும் எடுக்குமாம். எம்முடன் நல்லபல செயல் களைச் செய்து ஏதோ ஒரு வகையில் "ராசா" வாக வாழ்ந்து இறைவனடி சேர்ந்துள்ளார்.

இவரது திருமண பந்தம் தனது சகோதரியுடன் பின்னிப் பிணைந்தது. இந்தப் பிணைப்புக்குள் எத்தனையோ சரி, பிழைகள். அற்குள்ளும் நின்றுகொண்டு தன் கடமையின் வழியில் நின்றவர். சமூகப் பொதுத் தொண்டுகளைச் செய்கின்றபோதும் எத்தனையோ சரிபிழைகள். இவ்வேளையிலும் கூட எந்தப் பாரபட்சமும் இன்றிக் கடமையின் வழியில் நின்றவர்.

குற்றங்களைக் கண்டும் குறைகாணாது நல்லனவற்றை அல்லது கடமையைச் செய்கின்ற "உளச்சமநிலை" எல்லோருக்கும் வராது. அது "மனிதம்" உள்ளவர்களிடத்தும் பகுத்தறிவுள்ளவர்களிடத்தும் தான் காண முடியும். மனிதத்தை எங்கள் அன்னராசா அண்ணரிடம் நாம் காண முடிந்தது.

எங்களுடைய இடப்பெயர்விலும் மயிலிட்டி வாழ் மக்களின் இருப்பிற்கு அன்னராசா அண்ணரின் பங்களிப்பும் கணிசமானது. அவரது பெயரைச் சொல்லி வீடுகளை சுன்னாகப் பிரதேசத்தில் எடுத்து இருந்து ஆறுதல் பெற்றவர்கள் பலர்.

இதற்கு மேலால் எங்கள் கிராமம் 1990களில் இடம்பெயர்ந்து வரும்போது எமது குலதெய்வ விக்கிரகத்தையும் எடுத்து வந்தோம். அவற்றை வைத்து நாம் வழிபடுவதற்கு இருப்பிடம் கொடுத்ததற்குரிய காரணகர்த்தாவாக இருந்தவர் இவரே. இன்றுவரை எமது தெய்வத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பூர்வமாக வழிபட்டு வருகின்றோம். இதற்கு அனுமதித்த சுன்னாகம் வாழ் மக்களிற்கும் நாம் மனம்நிறைந்த நன்றியறிதலை செ. அன்னராசா அண்ணரின் கல்வெட்டினூடாக தெரிவிக்கின்றேன்.

தானும் தனது குடும்பத்தையும் மிகவும் எளிமையான வாழ்க்கை முறையைக் கையாண்டவர்கள். ஆடம்பரமற்ற வாழ்க்கை முறையோடு பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்குடன் என்றும் நடந்தவர்.

எமது கிராமத்தில் 1980, 1990களில் மிகச் சொற்ப அளவில் கல்வி கற்றுவிட்டு ஆங்காங்கே இருந்த இளைஞர்கள் சிலருக்கு அவர்களது கல்வி, கேள்வி அறிவுகளிற்கு அமைய அரசாங்க வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருந்தார். இங்கு இவர்களுக்கு அதற்குரிய வழிகளைக் காட்டினார். அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்வடையச் செய்தவர் இவரே.

எமது கிராமத்திலே இருந்த கிராமசபையின் வசதிகளை நல்ல முறையில் மக்கள் பயன்படுத்துவதற்கான வழிகளை எமக்குக் காட்டினார். அதன் பயன்பாடுகளை அறிய வைத்ததன் மூலம் அரச வளங்களைப் பயன்படுத்தத் தெரியாதிருந்த எல்லோருக்கும் தெரியப் படுத்தினார். உதாரணமாக சிக்கனக் கடன் வசதிகள், வாசிகசாலைப் பயன்பாட்டிற்கான ஏற்பாடுகள், விவசாயக் கடன் திட்டங்கள்.... எனப் பல.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் அறியப்படும்"

என்கிறார் வள்ளுவர். ஒருவன் சமூகத்தில் வாழ்ந்த வாழ்க்கையின் தரம், அவனது தகுதி என்பவற்றை அவனது பிள்ளைகளின் சிறப்பிலிருந்து கண்டு கொள்ளலாம். மூத்த மகன் செந்தூரன் உள்ளூராட்சித் திணைக்களத்தில் திட்டமிடல் பிரிவில் பணியாற்று கின்றார். இளையவர் மயூரன் புள்ளிவிபரவியல் திணைக்களத்தில் பணியாற்றுகின்றார். இரு பிள்ளைகளுமே வணிகமானிப் பட்டத் தினைப் பெற்று சிறந்தவர்களாக விளங்குகிறார்கள்.

கிட்டத்தட்ட ஏழு வருடங்களுக்கு மேல் நோயினால் பீடிக்கப்பட்ட தனது மனைவியைப் பொறுப்புணர்வோடு கவனமாகப் பராமரித்து வந்தார். பராமரித்தல் என்னும் போது ஒருகால் துண்டிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எங்கள் சின்னக்காவை) தன் மனைவியை அவரின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்தார்.

நீண்ட காலமாக காசிப்பூதராயர் பூசை ஒழுங்குகளைக் கவனித்து வந்தார். பூசை ஒழுங்கு என்னும்போது குறித்த பூசை நேரத்திற்கு முன்னரே பூசைக்கான ஆயத்தங்களைச் செய்து மேலும் அர்ச்சகருக்கு உதவியாளராக நின்று பூசை நடாத்துவித்து வந்தார். இந்தப்பணியை மனைவி (சின்னக்கா) சுகயீனமுற்றிருந்த வேளையிலும் தவறவிடவில்லை.

தனது உறவினர்களின் உறவுகள் முறிபடாமல் தொடர்ந்தவர். தேவையறிந்து உதவி செய்தும், ஆறுதல் கூறியும் தம் உறவுகள் மேம்படத் தனது நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தினார். அரச உத்தியோகத்தை நிறைவாகச் செய்து முடித்தவர். வீட்டுக் கடமையையும் கடமையுணர்வோடு செய்த அதேவேளை ஆன்மீகப் பணியையும் தொடர்ந்த ஒருவர்.

ஒருவனது பிறப்பும், மரணமும் அவன் யார் என்பதை உலகறிய வைக்கும். தன் மனைவியை (சின்னக்காவை) பூவோடும் பொட்டோடும் அனுப்பி வைத்துவிட்டு யாருக்கும் பாரமாக இராது தானும் இனிதாக இறைவனடி சேர்ந்துள்ளார். இது அவரது மனிதம் நிறைந்த வாழ்வின் முடிவையும் அவருக்கு இறைவனின் அருளாசியையும் எமக்கு உணர்த்தி நிற்கிறது.

அவரது இரு ஆண்மக்களும் தாய், தந்தையர் இருவரையும் இழந்து தவித்து நிற்கும் இவ்வேளை அவர்கள் இருவரும் மேலும் உயர்வான வாழ்வை வாழ எல்லாம் வல்ல காசிப்பூதராயர் பாதம் பணிந்து நிற்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திருமதி திரிலோஜினி ஜெயக்குமார்**
கிராமசபை வீதி, மயிலிட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா...

அப்பா எனக்கு கூறுவதற்கு வார்த்தைகள் இல்லை
கேட்பதற்கு நீங்களும் இல்லை இவ்வுலகில்
அம்மா போனபின்பு ஆறுதலாய் இருப்பீர்
எனநினைந்து நான் கூட்டி வந்தேன் என்னுடன்
அமைதியாக என்னை அதிரவைத்து சென்றதேனோ?
அம்மாவின் இழப்பு என்னை ஆட வைத்ததில்லை
ஆனால் உங்கள் இழப்பு என்னை
நிலைகுலைய வைத்ததப்பா
செவ்வாய் விடிய மட்டக்களப்பிலிருந்து வந்த என்னுடன்
எல்லா விடயமும் அளவளாவிய நீங்கள்
அன்று மதியம் ஆவதற்குள்
மடிவீர் என நான் நினைத்திருக்கவில்லை
எனக்கு கடமை வைக்க வேண்டாம் என்று நினைத்து
அம்மாவிடம் சென்றீரோ!
அம்மாவிற்கு நான் வைத்த தணல் ஆறும் முன்னே
அப்பாவிற்கும் வைத்துவிடு என்று
அமைதியாய்ச் சென்றீரோ!
ஆற்றவில்லையே அப்பா உங்கள் கடமைகளை யான்
ஆறிடுமோ என் நெஞ்சு
ஆற்றிடுமப்பா என்னை என்றும்.

அன்புடன்
**மகன் - செந்தூரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உள்ளத்திலிருந்து உன்னதமான மனிதருக்குசில வரிகள்...

என் திருமண பந்தத்தில் "மாமா" என்றும்
உறவு வந்து ஆறுவருடங்களாகிவிட்டன
உம் ஆற்றொணாத் துயர் கண்டிருப்பேன் நான்
ஆறிடுமோ என் நெஞ்சம் அடங்கியதோ உம் மூச்சு
ஒருநாள், இருநாள் இல்லை பதினொரு வருடமாய்
உம் பத்தினிக்கு பணிவிடை
செய்த உத்தமர் நீர்
பூவும் பொட்டுடனே மங்கலமாய்
வழி அனுப்பி மனையாள் பின்நீரும் சென்றீரோ!
"அப்பா வாங்கோ எங்களுடன்" என்று மகன்
அழைத்த கட்டளையை மறுக்காமல் வந்த
மறுமாதமே சென்றதேனோ?
மனையாள் தன்னை மண்போற்ற வழியனுப்ப
மறைந்திருந்ததுவோ உம் மாறாத நோய்
மகன் உம்மைப் பார்த்திட, மருமகள் யான்
பணிவிடை செய்திட, பேரப்பிள்ளைகளுடன்
மகிழ்வோடு வாழ்ந்திட உம்மை விடவில்லை காலன்
கண் இமைப்பதற்குள் சென்றுவிட்டீரே
சிவன் தொண்டாம் பெருந்தொண்டு என்ற
வாக்கிற்கே வாழ்ந்த தொண்டர் நீர்
இணுவிலில் வந்து இருபது நாளில் இருப்பிடம்
விட்டுப்போக சிவன் போட்ட கட்டளையோ இது?
உம் இறுதி மூச்சு அடங்கும் வரை
"சிவபூதராயர் கணக்கு தான் பார்த்திருப்பீர்"
காலன் உம்மை சேர்த்திருப்பார் சிவன் பாதமதில்
புகுந்த இடமாம் ஆதிமயிலிட்டி
குலதெய்வங்களை பாதுகாப்பாய் எடுத்துவந்து
சுன்னாகம் சிவபூதராயர் தனில் பிரதிஷ்டை செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமபுருஷர் நீர். உம் இச்செயலால்
நெஞ்சம் குளிர்ந்தது.
உம்மை உம் மண்ணும் மக்களும் என்றும் மறவார்.
இன்றும் உம் திருஉருவம்
சிவபூதராயர் உள்வீதியில் உலாவருவது போல்
நிழல் எனக்கு தெரிகின்றது.
உம் சிவன் பாதமதில் இருந்து
எம் அனைவருக்கும் ஆசீர்வதியுங்கள்.

என்றும் அன்புடன்
**மருமகள் - ஆர்த்தி**

## என் தந்தைக்கு எழுதிக்கொள்ளும் இறுதிமடல்

ஆசையும், அருமையுமாய் சின்னவனாய் வந்துதித்தேன்
எம் அம்மா முடங்கிய நாளிலிருந்து
எமக்கு நீர் இன்னொரு தாயானீர்!
எந்நேரமாக இருந்தாலும் நான் வரும்வரை
காத்திருந்து உணவு தந்து உபசரிக்கும்
உன்னதமான உயிர் நீர்!
உம் இழப்பால் நான் தோற்றுவிட்டேனப்பா!
அம்மாவின் பின் நீரும் செல்வீரெண்டோ
என்னை தனிமரமாய் விடாது
வாழ்க்கைத் துணை தேடித் தந்தீர்.
இரண்டு மாதத்தில் பேரப்பிள்ளையும்
வந்திடுமே, பார்க்காமல் சென்றதேனோ?
மூன்று பேரப்பிள்ளைகள் போதுமென்று போய்விட்டீர்
ஆறு, ஏழு பிறவி எடுப்பினும் தீருமோ என் கவலை

அன்பு மகன்
**மயூரன் (முகுந்தன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருள் மாணிக்கம் என் மாமா

நங்கை இவள் உம் மனை புகுந்து
காலம் ஒன்று கூட ஆகவில்லையே மாமா!
காலனவன் தன் கண்முடித்தனமான விளையாட்டில் - தன்
கைப்பொம்மை ஆக்கிவிட்டானே என் மாமாவை
உம் கடமைகள் முடிந்ததென்று
அமைதியாய் உறங்கி விட்டீர்களோ - எனினும்
உமக்கான என் கடமைகள் எவ்வளவோ உண்டல்லோ!
என்னால் அமைதியாய் உறங்கக் கூட முடியவில்லையே மாமா!
காற்றலை வழியாக உம் நலக்கேடு செய்திகேட்டு
காற்றாய்ப் பறந்தோடி வைத்தியசாலை வந்தேனே...
விதி செய்த சதியால்
காலனோடு கடைசிநேரம் உம் போராட்டம் கண்டு - என்
கண்ணார நீர் சொரிய கதிகலங்கி நின்றிருந்தேனே ஐயோ மாமா
மணம் முடித்து மறுவீடு வரும்போது - என்
மனதுடன் போராட்டங்கள் இனம்புரியா அச்சங்கள்
இறைவனவன் கைவிடவில்லை என் பிறந்தவீடுபோல்
அன்புடன் அரவணைத்தது என் புகுந்த வீடு.
என் தாய் தந்தை வடிவினில் கண்டு கொண்டேன் உம்மை!
நீர் கற்றுத் தந்த வாழ்க்கைப் பாடங்கள் ஆயிரம் எனக்கு
உங்கள் வீட்டின் சின்ன மருமகள் அல்ல
சின்ன மகள் அல்லவோ நான்.
யூலை ஒன்று வருவேன் என்றீரே எம் வீட்டிற்கு
யூனுடனே எம்மை விட்டுப் போனது ஏனோ?
ஏனிந்த அவசரம் மாமா உங்களிற்கு
செப்ரெம்பரில் என் குழந்தையாய் எம் வீடு வருவதற்காய்
அவசரமாய் போய்விட்டீரோ
உம் சிரித்த முகம் கண்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டாய்ப் பறந்தோடும் நம் கவலைகள்
உம் ஆத்மீக பயணம் தனில் ஆண்டவன் தன்னோடு
அமைதியாக கொண்டு சேர்த்துவிட்டான்.
இனி எப்பிறப்பில் காண்பேனோ என்று நான் தவிக்கவில்லை
ஏனெனில்
எம் இப் பிறவியிலே மறு ஜென்மம் உண்டு உங்களிற்கு
என் சிசுவாக
கண்கள் பனிக்க காத்திருக்கும்

*உங்கள் அன்பின் மருமகள்*
**நீதிமதி**

# அன்பான அப்பப்பாவிற்கு எங்கள் அன்பு வரிகள்

சனி ஞாயிறு என்றால் பறந்து வந்திடுவோம்
உடுவிலுக்கு நாம்
ஆசையாய் அரவணைத்து அன்புமொழி கூறுவீர்கள்
வகை வகையான தீன்பண்டங்கள் வாங்கி
எமக்குத் தருவீர்
இப்போது அப்பம்மாவும் இல்லை, அப்பப்பாவும் இல்லை
அன்பு மொழி கூறும் அன்புள்ளங்கள்
இவ்வுலகினில் இல்லை
என்றும் எங்களின் பாசத்தினை
ஏற்றுக் கொள்ளுங்கள் அப்பப்பா

என்றும் பேரன்புடன்
**லயஹரி, யதுரன், லக்ஸ்மினன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் தூறல்

உறவுகள் பிரிகையிலே
உரிமையாய் உறவென்று
உம்மைத் தானே சொல்லி இருந்தோம்
நீரும் பிரிந்தீரே ஐயா
இனியாரை "சித்தப்பா" என்று
சொல்லிடுவோம்.
சென்று வாருங்கள்
சேர்ந்த இடம் சொர்க்கம் என்று
சொப்பனத்தில் தென்புலத்தோர்
செய்தி சொன்னார்கள்.

**பவானி, ஜெயபவான்**
**தயாளினி, றஞ்சினி,**
**சுகந்தினி**

## தேற்றம்

இப்புவிப் பிறந்தார் எப்பவோ ஓர்நாள்
இறந்திடல் நியதியென உணர்ந்தேநாம்
எந்தையின் இறப்பை ஏற்றுத் தணிந்து
எம்துயர் துடைத்து இறைபதம் பணிவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் வாழ்க்கையில் ஏற்படும் ஆசௌச விளக்கங்களும் அதற்கான கால எல்லைகளும்

## ஆசௌசம் என்றால் என்ன ?.

ஆசௌசம் என்பது சுத்தமின்மை எனப்பொருள்படும். ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுக் கிரியைகளைச் செய்கிறவனுக்கு அவைகளைச் செய்ய அதிகாரம் இல்லாமற்செய்யும் ஓர் அசுத்தி ஆசௌசம் எனப்படும். இது தீட்டு, துடக்கு எனவும் அழைக்கப்படுகின்றது. இந்த ஆசௌசம் பத்துவகையாக ஏற்படலாம் எனச்சமய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவையாவன,

1. பிறத்தல்
2. இறத்தல்
3. சுடுதல்
4. பிரேதத்தின் பின்செல்லல்
5. சுமத்தல்
6. அழுதல்
7. ஆசௌசியின் அன்னம் புசித்தல்
8. ஆசௌசிகளுடன் கலத்தல்
9. முகச்சவரம் செய்யாமை
10. சபிண்டீகரணம் செய்யாமை

பிறப்புத் தீட்டிலும் இறப்புத்தீட்டு இருமடங்கு வலிமையுடையது. பூப்படைதல் அதைவிட இருமடங்கு. மரணத்தினால் ஏற்படும் தீட்டைவிட இறந்தவரைத் தகனம் செய்வதால் ஏற்படும் தீட்டு இருமடங்கு வலிமையுடையது எனக்காமிகம் கூறுகின்றது.

## ஆசௌசம் கடைப்பிடிக்கப்படும் நாள்கள்

பூரண ஆசௌசம் என்பது அந்தணர்களுக்கு 10 நாட்கள். மச்சமாமிச போசனமின்றி சைவசமய ஆசாரப்படி ஒழுகும் நற் சூத்திரர்க்கு 15 நாட்களும் ஏனையோருக்கு 30 நாளும் ஆசௌசமாகும். ஆலயங்களில் தொண்டு செய்யும் சிவகன்மருக்கு 20 நாளும் திராவிடகானம் பாடவல்லவருக்கு 15 நாளும் ஆசௌசம் காக்கப்படல் வேண்டும் என்ற ஒருகுறிப்பும் உண்டு. இது அவர்கள் சுத்தசைவர்களாக ஒழுகுவதால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மேலே கூறப்பட்ட விதி விலக்கைச் சாதகமாகப் பயன்படுத்தியே பாரத தேசத்தில் சிலபகுதியினர் 21 ம் நாளும் யாழ்ப்பாணத்தில் ஒருபகுதியினர் 16 ம் நாளும் துடக்குக் கழிக்கின்றனர். இதற்குச் சாஸ்திரப்பிரமாணம் எதுவும் இல்லை.

## ஒருவருடைய ஆசௌசம் அவர்சார்ந்த யார்யாருக்கு வரும்?

ஓர் ஆண்மகனுக்கு அவனுடைய தந்தை, தந்தையின் தந்தை, தந்தையின் தாத்தா, தந்தையின் தாத்தாவின் தந்தை, தந்தையின் தாத்தாவினது தாத்தா, அவரது தந்தை என்னும் அறுவரும் அவ்வறுவருடைய மகன். மகனின் மகன், பேரனின் மகன் ,பேரனின் பேரன் , பூட்டனின் மகன், பூட்டனின் பேரன் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவரும் தானுமாக ஏழுதலைமுறையினர்க்கு வரும் என ஆகம நூல்கள் கூறுகின்றன. இவர்கள் சபிண்டர் எனவும் ஞாதிகள் எனவும், உறவினர் எனவும் அழைக்கப்படுகின்றனர்.

## ஆசௌச வகைகள்

### 1. ஜனன ஆசௌசம் ( பிறப்பு சம்பந்தமான துடக்குகள்)

* ஆண் குழந்தை பிறந்தால் 30 நாளும் பெண்குழந்தை பிறந்தால் 40 நாளும் தாய்க்கு ஆசௌசம் உண்டு
* ஆண்குழந்தை பிறந்தால் தந்தைக்கும் உறவினர்க்கும் பூரண ஆசௌசம் உண்டு
* பெண் குழந்தை பிறந்தால் குழந்தையின் சகோதரர், தந்தை, தந்தையின் உடன் பிறந்தோர் ,அவர்களது புதல்வர்கள், தந்தையின் தந்தை, அவருடன் பிறந்தோர் ஆகியோருக்கு பூரண ஆசௌசம் உண்டு
* நிறைமாதத்தில் குழந்தை இறந்து பிறந்தாலும் பிறந்து இறந்தாலும் மரண ஆசௌசம் இல்லையெனினும் ஜனன ஆசௌசம் பூரணமாக உறவுகள் யாவர்க்கும் உண்டு.
* 7ஆம் 8ஆம் 9ஆம் மாதங்களில் குழந்தை இறந்து பிறந்தாலும் தாய்தந்தையர்க்குப் பூரண ஆசௌசம் உண்டு. உறவினர்க்கு கேள்விப்பட்டதும் ஸ்நானத்துடன் சுத்தமாகும்.
* கர்ப்பம் கரைந்தால் அதாவது கருச்சிதைவு ஏற்பட்டால் எத்தனையாம் மாதத்தில் அது நிகழ்ந்ததோ அத்தனைநாள் துடக்கு தாய்க்கு மட்டும் உண்டு
* ஒரு குழந்தை பிறந்து ஆசௌச நீக்க தினத்தின் பின்னர் அச் செய்தியறிந்தால் தந்தை ஸ்நானத்தினால் சுத்தமடைகின்றார். ஏனையோருக்கு ஆசௌசமில்லை.

### 2. மரணஆசௌசம் (இறப்பு சம்பந்தமான துடக்குகள்)

* பொதுவான மரணத்துடக்குகள் அந்தணர்க்கு 10 நாளும் ஏனையோருக்கு 30 நாளும் உண்டு.

### ஆண் குழந்தை.

* குழந்தை பிறந்து துடக்கு கழியுமுன் இறந்தால் பெற்றோருக்கு மட்டும் பூரண ஆசௌசம் உண்டு. ஏனையோருக்கு ஸ்நானத்தினால் சுத்தமாகும்.
* 3 வயதுக்குட்பட்ட குழந்தை இறந்தால் சகோதரர் பெற்றோருக்கு பூரணஆசௌசம். ஏனையோருக்கு அந்தணராயின் ஒருநாளும் ஏனையோராயின் 3 நாளும் ஆசௌசம்.
* 3 வயதிற்கு மேல் உபநயனம் செய்யுமுன்னிறந்தால் அல்லது அல்லது ஏழு வயதிற்குமுன்னிறந்தால் அந்தணர்க்கு 3 நாள் . ஏனையோருக்கு 9 நாள் பெற்றோருக்கும் சகோதரர்க்கும் பூரண ஆசௌசம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ ஏழு வயதிற்குமேல் ஒரு பிள்ளையிறந்தால் பெற்றோருக்கும் சகோதரர்க்கும் பூரண ஆசௌசம் உண்டு.

**பெண்பிள்ளை**

மூன்று வயதுக்குட்பட்ட பெண்குழந்தை இறந்தால் பெற்றோருக்கும் சகோதரர்க்கும் மட்டும் ஆசௌசம் உண்டு. உறவினர்க்கு ஸ்நானத்துடன் நீங்கும்.

மூன்று முதல் எட்டுவயது வரையான பெண்பிள்ளை இறந்தால் அந்தணராயின் ஒருநாளும் ஏனையோர் மூன்று நாளும் காக்கவேண்டும். பெற்றோருக்கும் சகோதரர்க்கும் பூரண ஆசௌசம் உண்டு.

எட்டுவயதின்மேல் திருமணத்திற்கு முன் இறந்தால் உறவினர்கள் அந்தணர் மூன்றுநாளும் ஏனையோர் 9 நாளும் காக்கவேண்டும். பெற்றோருக்கும் சகோதரர்க்கும் பூரண ஆசௌசம் உண்டு.

திருமணமான பெண் இறந்தால் அவளது தந்தை வழி உறவினர்க்கு ஆசௌசம் இல்லை. கணவனுக்கும் அவனது உறவுகளுக்கும் பூரண ஆசௌசம் உண்டு.

**3. விசேட விதிகள்.**

1. ஒருவர் இறந்தால் அவரது தாயின் தந்தை , தந்தையின் தாய், தாய்மாமன், மனைவி, பெண்கொடுத்த மாமனார், பெண் கொடுத்த மாமியார், தாயின் சகோதரிகள், தாயின் சகோதரர்கள் முதலியோர் அந்தணராயின் 3 நாளும் ஏனையோர் 9 நாளும் ஆசௌசம் காக்க வேண்டும்.
2. ஒரு பிறப்புத்தீட்டை காத்துக் கொண்டிருக்கும்போது இன்னொரு பிறப்புத் தீட்டு வருமாயின் பெற்றோர் பூரண ஆசௌசம் காக்க வேண்டும். உறவினர்க்கு முதலாவது ஆசௌசக் கழிவுடன் இரண்டாவது கழிந்துவிடும்.
3. ஒரு மரண ஆசௌசத்தின் நடுவில் ஒரு ஜனன ஆசௌசம் வந்தால் அது முந்திய மரண ஆசௌச முடிவில் கழிந்துவிடும். ஆனால் குழந்தையின் பெற்றோருக்கு மட்டும் அவர்களது ஜனன ஆசௌசம் பூரணமாகவுண்டு.
4. ஓர் ஆசௌசம் காத்துக் கொண்டிருக்கும்போது இன்னொரு மரண ஆசௌசம் வந்தாலும் அது முந்திய துடக்குடன் கழிந்துவிடும். ஆனால் தாய், தந்தை, கணவன் அல்லது மனைவி, பிள்ளைகள் இறந்தால் புதிய தீட்டை முழுமையாகக் காக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விசேட விதிவிலக்குகள்.**

1. தற்கொலை மரணத்தினால் தகனம் செய்தவர்களுக்கு மட்டும் ஆசௌசம் உண்டு. மற்றையோருக்கு இல்லை.
2. தற்கொலை செய்து இறந்தவருக்கு மந்திரமில்லாமல் தகனம் செய்து ஆறுமாதம் கழிந்தபின்பே கிரியைகள் செய்யவேண்டும்.
3. யுத்தத்தில் வீரமரணம் அடைந்தோருக்கு உடனே கிரியைகள் செய்யலாம். இம்மரணத்தினால் உறவினர்க்கு ஆசௌசமில்லை.

**பொது விடயங்கள்**

ஆசௌச காலத்தில் நித்திய கர்மாநுஸ்டானங்களை மந்திரம் உச்சரிக்காது மானசீகமாகச் செய்யலாம். நித்திய விரதங்களை அநுஸ்டிக் கலாம்.

தமது தலைமுறையிலுள்ளோரைக் குறித்து சிரார்த்தம் , மாசிகம் முதலியன செய்யும் தினம் ஆசௌச காலத்தில் வரின் ஆசௌசம் நீங்கிய தினத்தில் அதனைச் செய்யலாம். சிரார்த்தம் ஆரம்பித்தபின் தெரியவரின் சிரார்த்தம் நிறைவுபெறும் வரை ஆசௌசம் இல்லை.

ஆசௌசியின் பொருட்கள் அன்னம் முதலியனவும் ஆசௌசம் என்பதால் அவருடன் கலத்தலாகாது.

தானியம், பொன், பசு, ஆடு, வெல்லம், நெய், எள்ளு, கரும்பு, காய்கறி, தண்ணீர், உப்பு, விறகு, எண்ணெய், மருந்து, அரிசி இவற்றிற்கு ஆசௌசம் இல்லை.

ஆசௌசியின் அன்னம் புசித்தவனுக்கும் ஆசௌசம் நேரும். அறியாது புசித்தால் அவ்வுணவு ஜீரணிக்கும்வரை ஆசௌசம் உண்டு. அறிந்து புசித்தால் ஆசௌசியின் ஆசௌசக் கழிவு வரை அவ்வுணவு புசித்தவரும் ஆசௌசம் காக்கவேண்டும்.

**பூப்பு ஆசௌசம்.**

மாதவிலக்கு காலத்தில் ஒருபெண் நான்கு நாட்களும் பூரணமாக விலக்கப்பட்டவளே. ஐந்தாம் நாள் எண்ணெய் ஸ்நானத்தின் பின்னரே அவள் நற்காரியங்களில் கலந்து கொள்ளலாம். 20 நாளின் மேல் பூப்புவந்தால் மேற்கூறிய முறையில் கடைப்பிடிக்கலாம். 20 நாட்களின் முன் வந்தால் ஸ்நானத்தினால் சுத்தமாகும். அதை மாதவிலக்காகக் கொள்வதில்லை.

பூப்புத்தீட்டு குடும்பத்தவரையோ உறவினர்களையோ பாதிப்பதில்லை. பருவமடையும் போதும் பின்னர் மாதவிலக்காகும் போதும் அப்பெண் தனித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குமாறு வைக்கப்பட்டு குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் அவளுடன் தொடர்பின்றி இருந்தால் அவர்களுக்கு தீட்டில்லை. ஆனால் அதிகமான குடும்பங்களில் அப்பெண் வீட்டின் சகல பகுதிகளிலும் நடமாடுவதாலும் மற்றவர்கள் அவளோடு தொட்டுப் பழகுவதாலும் ஆடைகள் ஒன்றோடொன்று தொடர்புபடுவதாலும் துடக்கு ஏனையோருக்கும் காக்கப்படவேண்டி நேர்கின்றது.

### கிராம ஆசௌசம்

ஓர் ஊரில் பிரேதம் இருக்கும்வரை சகலருக்கும் துடக்கு இருப்பதால் கோவிற்பூசை முதலியன செய்யக்கூடாது. சிவபூசை அநுட்டானம் போன்றவையும் விலக்கப்பட்டுள்ளன. பிரேதம் கிராமத்தை விட்டு அகற்றப்பட்டபின்னர் பிராயச்சித்தம் செய்து கர்மாநுட்டானங்கள் செய்யலாம். இது சிற்றூர்களுக்குப் பொருந்தும். பலவீதிகளுள்ள பெரிய ஊர் ஆனால் ஓர் எல்லைக்கு அப்பால் அதாவது பூசைக்கான கைமணி அடிக்கும் ஓசைகேட்கும் தூரம் அல்லது சுமார் 55 யார் தூரத்தை ஆசௌச எல்லையாக எடுத்துக் கொள்ளலாம். அடுத்த வீதியில் பிரேதம் இருந்தாலும் இந்தக் கணிப்பின்படி வரும் இடைவெளிக்குள் துடக்குக் காக்கலாம். அப்பால் இருந்தால் ஆசௌசம் இல்லை.

கோவிற் பிரதிஷ்டை முதலிய கிரியைகளுக்கு நடுவில் கிராமத்தில் ஒரு மரணம் நிகழ்ந்தால் இறந்த பிரேதத்தை மயானத்திற் சேர்த்த பின்னர் தொடர்ந்து கிரியை செய்யலாம். பட்டணம், இராசதானி முதலிய பெருநகர்களில் துடக்கு இல்லை. பிரேதத்தைத் தொட்டவர், தூக்கியவர், பின்னே சென்றவர்கள் துடக்கு உடையவர்கள்.

துடக்கு நாட்கள் வைதிக முறையிலே முத்தீ வளர்க்காத வர்களுக்கு இறந்தநாள் முதல் கணிக்கப்படல் வேண்டும். சிவபூசையோடு தீ வேட்கும் குருமாருக்குத் தகனம் செய்த நாள் முதல் கணிக்கவேண்டும். இரவில் பிறப்பு, இறப்பு நிகழ்ந்தால் அடுத்துச் சூரியன் உதிக்குமுன் உள்ள நாளே கொள்க. மேலைநாட்டு முறைப்படி இரவு 12 மணிக்குப் பின்னர் அடுத்த நாள் எனக் கொள்ளக் கூடாது.

### தீட்டானவர்கள் செய்யக் கூடாதவை

ஆலயத்துள்ளே தீட்டுடன் சம்பந்தப்பட்டவர் செல்லக்கூடாது. ஆசௌசத் தொடர்புடையவர் ஆசௌசம் இல்லாதவரைத் தீண்டக் கூடாது. ஆசௌசம் உள்ளவர் ஆசௌசம் இல்லாதவரை வணங்கக் கூடாது. அதேபோல ஆசௌசம் இல்லாதவர் ஆசௌசம் உள்ளவரை வணங்கக் கூடாது. ஏகாதசி துவாதசி பிரதோஷவிரதத் தொடர் புடையவர்கள் விரதத்தை நிறுத்தவேண்டியதில்லை. உபவாசம் இருக்கலாம். பூசை செய்யக்கூடாது. தொடக்குக் காலத்தில் கட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தை என்பவற்றில் படுக்கக் கூடாது. வெற்றுத் தரையில் படுத்தெழும்புவது நல்லது. உருத்திராக்கம் அணியக்கூடாது.

### தனிஷ்டா பஞ்சமி தோஷம்

தனிஷ்டா பஞ்சமி தோசம் என்பது அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் ஒன்றில் ஒருவர் இறந்தால் தனிஷ்டா பஞ்சமி தோசமாகும். பஞ்சமித் திதியில் எவ்வித தோசமுமில்லை. அவிட்டம், சதயம் ஆகிய நட்சத்திரங்களுக்கு ஆறு மாதங்கள் தோஷமாகும். பூரட்டாதி உத்திரட்டாதி நட்சத்திரங்களுக்கு மூன்று மாதங்களும் ரேவதி நட்சத்திரத்துக்கு ஒன்றரை மாதமும் தோசமாகும்.

### தனிஷ்டா பஞ்சமி தோசம் நீங்கச் செய்யவேண்டிய காரியங்கள்.

ஆசௌசம் நீங்கும் வரை தீபம், பசு, நீர், பூரண கும்பம் என்பனவற்றை ஒவ்வொரு நாளும் இல்லத்தில் வைத்தல் வேண்டும். நவதானியம், எள்ளு, நெற்பொரி என்பவற்றை இல்லத்து வளவெங்கும் தூவுதல் வேண்டும். நீற்றுப் பூசணிக்காயை வாயிலில் கட்டுதல் வேண்டும். பய நிவர்த்தி நூல் என்பன கட்டுதல் தர்ப்பையினை ஆள் உருவம் செய்து தகனம் முதலியவற்றை குரு மூலமாக பஞ்சமித்தோச நிவர்த்தி சாந்தி செய்தல், யமனை எருமை வாகனத்தில் செப்புத் தகட்டில் கீறி பூஜித்து தானமாகக் கொடுத்தல் நவக்கிரகம், மஹாலட்சுமி பார்வதி பரமேஸ்வரன் முதலிய தெய்வங்களைப் பூஜித்தல், ஹோமம் செய்தல், தசதானங்கள் வழங்குதல் என்பன செய்து தனிஷ்டா பஞ்சமி தோஷநிவர்த்தி செய்து கொள்ளப்படல் வேண்டும்.

### அபரக்கிரியைகளில் கவனிக்க வேண்டியவை

தந்தை தாயாருக்கு மூத்த புதல்வனே சங்கற்பித்துக் கிரியைகளைச் செய்தல் வேண்டும். தந்தைக்கு மூத்த புதல்வனும் தாய்க்கு இளைய புதல்வனும் கிரியை செய்யும் வழக்கமும் உள்ளது. புத்திரன் அல்லாத வேறு உறவினர் ஒருவர் கிரியை செய்வதாயின் அவர் தனது பெற்றோரில் ஒருவருக்காவது முன்னர் கிரியை செய்திருக்க வேண்டும். இன்றைய வாழ்க்கைச் சூழலில் கிரியை செய்ய அதிகாரம் பெற்றவர் வெளிநாட்டிலிருந்தோ தூரதேசத்திலிருந்தோ வந்து கிரியை செய்துவிட்டு சிலநாளில் திரும்பிச் சென்று விடலாம். அந்தியேட்டிக் கிரியைக்கு அதிகாரம் பெற்றவர் நிற்கமுடியாது. இந்நிலைமை முன்னமே புரிந்துகொண்டால் கிரியை நாயகர் வர்ணக்கிரியை செய்யக் கூடியவர்கள் பட்டியலில் தமக்கடுத்து உள்ளவரும் அந்தியேட்டி முடியும்வரை நிற்கக்கூடியவருமான ஒருவரைத் தன்னுடனாக்கி மரணக்கிரியை செய்யவேண்டும். பின்னர் கிரியை நாயகர் விட்டு நீங்கினாலும் உடனிருந்து செய்தவர் அந்தியேட்டி முதலான ஏனைய கிரியைகளைத் தொடர்ந்து செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆபத்து வேளையில் ஆசௌசம்.

நாட்டிற்கோ கிராமத்திற்கோ குடும்பத்திற்கோ ஆபத்து நேர்ந்த வேளையில் ஆபத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆசௌசம் தடையாகாது. உடனடியாக உதவி தேவையானது எனக்கண்டால் தயங்காமல் உதவலாம். ஆபத்தில் நின்றும் காப்பாற்றுவதற்காக மற்றொரு வீட்டினுள் புகுதலோ, ஆசௌசம் இல்லாத ஒருவரைத் தூக்கிவருதலோ பிடித்துவருதலோ வேற்றுப் பெண்ணொருவரைத் தூக்கி வருதலோ பிழையாகாது. அச்செயல் புண்ணிய செயலாகக் கருதப்படும்.

### சிரார்த்த கருமங்களுக்குத் தேவையான பொருட்கள்

எள், நெல்லரிசி, கோதுமை, சிறுபயறு, உழுந்து, சர்க்கரை தேன், பசுநெய், பசுப்பால், பசுத்தயிர், எண்ணெய், சிகைக்காய் உப்பு, புளி சீரகம், மஞ்சள், இஞ்சிக்கிழங்கு, வாழையிலை வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், தேங்காய், இளநீர், புடோலங்காய் அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சம்பழம், நெல்லிக்காய் சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, கராம்பு, சாதிக்காய் முதலியன.

### சிராா்த்தத்திற்கு ஆகாத பொருட்கள்

கடலை, பீர்க்கங்காய், நீற்றுப்பூசணிக்காய், முருங்கைக் காய் வாழைப்பூ, வெங்காயம், வெள்ளைப்பூண்டு, கொவ்வை, எருமைப்பால், எருமைத்தயிர் முதலியன.

### சிராா்த்த தினத்திலே செய்யக் கூடாதவை

தயிர் கடைதல், நெல் குற்றுதல், நெய் முதலிய பொருட்களைக் கொடுத்தல், வாங்குதல், கண்ணீர் விடுதல், கோபித்தல், பொய் சொல்லுதல், சிந்திய அன்னத்தை மிதித்தல்.

### சிராா்த்தத்திற்கு உபயோகமாகும் மலர்கள்

துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியா வர்த்தை, எருக்கம்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியன.

### சிராா்த்த காரியத்தின் சில பொது விடயங்கள்

ஒருவர் இறந்த திதியைக் கொண்டே சிராா்த்தம் நிச்சயிக்கப்படுகின்றது. ஒரு மாதத்தில் இரு தடவைகள் சிராா்த்த திதி வந்தால் பின்னைய திதியினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கொள்ளல் வேண்டும். சிரார்த்தம் செய்யும் தினத்தில் ஆசௌசம் இருக்குமாயின் குறிப்பிட்ட அந்த ஆசௌசம் கழிந்த தினத்தில் அச்சிராரத்தம் செய்யப்படல் வேண்டும். ஆசௌசம் கழிந்த தினத்திலே சிராரத்தம் செய்ய முடியாவிட்டால் அம்மாத அமாவாசையில் அல்லது ஆடி அமாவாசையில் தந்தைக்கும் சித்திரா பூரணையில் தாய்க்கும் அச்சிராரத்தம் செய்யப்படல் வேண்டும்.

## சிராரத்த தினத்திலே பெண்ணின் நிலைப்பாடு

1. சிராரத்தம் செய்யும் கர்த்தாவின் மனைவி வீட்டுக்கு விலக்காக இருந்தால் அன்று சிராரத்தம் செய்யாது மனைவிக்கு வீட்டு விலக்கு வந்து ஐந்தாம் நாள் செய்தல் வேண்டும்.
2. விதவைப்பெண் வீட்டு விலக்காயிருக்கும் போது தன்கணவனுடைய சிராரத்தம் வந்தால் வீட்டு விலக்கு வந்து ஐந்தாம் நாளே சிராரத்தம் செய்யப்படல் வேண்டும்.
3. சிராரத்தத்திற்காகச் சமையல் ஆரம்பமாகிய பின்பு ஆசௌசம் வந்தால் அச்சிராரத்தம் முடியும் வரை அந்த ஆசௌசம் அவரைப்பற்றாது.

இம்மலரில் ஆசௌசம் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட விடயங்கள் யாவும் அகில இலங்கை இந்துமாமன்றப் பொன்விழா வெளியீடான "இந்து மக்களுக்கு ஒரு கையேடு" என்னும் நூலில் இருந்து தொகுக்கப்பெற்றவை.

### திருமந்திரம்

ஊர் எல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேர்இட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்புஒழிந் தார்களே!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகர் சுவாமிகளின் அருள் மொழிகள்

- தனிமையாயிரு விழித்திரு தூண்டிற்காரனைப் போலிரு தைரியமாயிரு
- பார்ப்பதெல்லாஞ் சிவமாகப் பார் செய்வதெல்லாஞ் சிவத்தொண்டாகச் செய்.
- இன்பமும் துன்பமும் இகழும் புகழும் மாறி மாறி வரும் இவற்றைக் கண்டு அஞ்சாதே.
- செத்தாரைப் போலத்திரி நெஞ்சே பிறர் குற்றங்களை மன்னித்து மறந்திடு.
- மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும் கீழல்லர் கீழல்லவர்.
- எல்லோரோடும் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதே சமய வாழ்வு.
- பொய்யும் மெய்யும் புகழ் வைத்தாய் இதுவும் உன்றன் பேரருளே.
- அமைதியாயிரு கடவுள் வரினும் அவருக்கும் ஓர் ஆசனத்தைக் கொடுத்து விட்டுச் சும்மாயிரு.
- துன்பங்களை எதிர்நோக்கி முன்னதாகவே தயார் செய்ய முயலாதே வரவரப் பார்.
- ஒருவனை கூடாதவன் என்று நினைக்கும் நினைவே நினைப்பவனுக்கு நஞ்சாகும்.
- கண்களை மூடிக்கொண்டிருந்தால் போதாது மனமல்லவா மூட வேண்டும்.
- எங்களுக்கு ஒரு குறையுமில்லை. ஒரு குறையுமில்லை என்று உணராதது தான் குறை.
- நாவை நீ காத்துக்கொள் அன்றேல் உனக்கு தீங்கு நேரும்.

## அமுத மொழிகள்

நீ உன் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்துபோ மற்றவர்களின் முதுகின் மேல் ஏறிப்போக விரும்பாதே. அது உனக்கு ஆபத்து.

(நியேட்சே)

பெரிய நெருக்கடிகளுக்கிடையில் தான் இறைவன் வெற்றி பெறுவதற்கான வழிகளையும் வகுத்திருக்கிறான்.


(ஹோம்ஸ்)

பகைமையால் எப்போதும் அழிவுதான்
அன்பு ஒருபோதும் மடிவதில்லை.


(மகாத்மாகாந்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காக இருந்து எம்மை
வாழ வழிகாட்டி நல்வாழ்வு வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வம்

## திரு. செல்லையா அன்னராசா

அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு நேரிலே வந்து உதவிகள்
செய்தவர்களுக்கும், வீட்டிற்கு வந்து தமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்து, அஞ்சலி செலுத்தியோருக்கும்
உள்ளூரில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும்
தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம், ஆறுதல் வார்த்தை
கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில்
பங்குபற்றிப் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர்
நண்பர்கள் அனைவருக்கும், அந்தியேட்டிக் கிரியைகளிலும்
ஆத்மசாந்திக் கிரியைகளிலும் பங்குபற்றியவர்களுக்கும்
எமது இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

"ஆர்த்தியம்பதி",
வட்டுவினி ஒழுங்கை,
இணுவில் மேற்கு.
23-07-2015

இங்ஙனம்
**குடும்பத்தினர்**

விக்னேஸ் பிறிண்டேர்ஸ், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா…

- ★செல்லையா + ★இலட்சுமிப்பிள்ளை
  - ★பத்மாவதி + சுப்பிரமணியம்
    - ஸ்ரீகுமரன் + சிவரஞ்சினி — ஸ்ரீபிரியன், சிவஇனியன், சிவசங்கவி
    - ஜெயலட்சுமி + சிவநேசன் — ஹம்சிதா, சஜன்
  - **அன்னராசா**

- ★செ…
  - சுப்பிரமணியம் + ★பத்மாவதி
  - சின்னத்தங்கம் + ★இராசரத்தினம்
    - பவானி + ஆனந்தராசா — மதுமிதன்
    - ஜெயபவான் + சசிச்செல்வி — ஜெனிஷா, யானுஷன், ஜெரூசா
    - தயாளினி + ஞானவேல் — கீர்த்தனா, கீர்த்திகா, தனுசன்
    - றஞ்சினி + கேதீஸ்வரன் — மதுசன், சாளினி
    - சுகந்தினி + பரமேஸ்வரன் — றவீனா, சயனிகா, தரணிகா
  - ★பரமேஸ்…

அன்னராசா — பரமேஸ்…
- செந்தூரன் + ஆர்த்திகா
  - லயஹரி
  - யதூரன்
  - லக்ஸ்மினன்
- மயூரன் + நீதிமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

★செல்லையா + ★பொன்னுப்பிள்ளை

ம்
ம்
யுமிதன்
னிஷா
னுஷன்
ளுசா
ந்தனா
ந்திகா
வுசன்
யுசன்
ளினி
வீனா
பனிகா
ரணிகா

- ★பரமேஸ்வரி
  - மயூரன் + நீதிமதி
- முருகையா + தவமணி
  - பகீரதன்
  - தயாபரன்
  - மோகனா
  - தாரணா + முரளீதரன்
- மல்லிகாதேவி + ★கிருஸ்ணமூர்த்தி
  - முரளீதரன் + தாரணா
  - ஸ்ரீதரன்
- கந்தசாமி + சிவகௌரி
  - பிரசாந்தி
  - மதுசாந்தி
  - புகழாயினி
- புவனேஸ்வரி + ★நவரத்தினம்
  - கேசவன்
  - ★தனலட்சுமி
  - தனுசா + சிவகுமார்
  - மதுரா
- அண்ணாத்துரை + வதனி
  - திவியா
  - துசியா
  - தனுசா

★ - அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யோகர் சுவாமி சிந்தனை

தன்னை அறிந்தால் தவம்வே றில்லை
தன்னை அறிந்தால் தான்வே றில்லை
தன்னை அறியச் சகலமு மில்லை
தன்னை அறிந்தவர் தாபத ராமே.

பொன்னை யன்றிப் பொற்பணி யில்லை
என்னை யன்றி ஈசன்வே றில்லை
தன்னை யன்றிச் சகம்வே றில்லை
தன்னை அறிந்தவர் தத்துவா தீதரே.

நன்மையுந் தீமையும் நங்கட் கில்லை
தொன்மையும் புதுமையும் தூயோர்க் கில்லை
அன்னையுந் தந்தையும் ஆன்மாவுக் கில்லை
சொன்ன சுருதியின் துணிபிது வாமே.

காலமு மில்லைக் கட்டு மில்லை
மூலமு மில்லை முடிபு மில்லை
ஞாலமு மில்லை நமனு மில்லை
சால அறிந்த தவத்தி னோர்க்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org